# திருமதி ராஜம் கிருஷ்ணன் படைப்புகள்

# கூட்டுக் குஞ்சுகள்

## 12

“வேல்முருகன் கொட்டகையில் சினிமாப் பாக்க நாளக்கி எல்லாப் பிள்ளையளுக்கும் சீட்டு வாங்கித்தரேன்னு ஏசண்டு சொல்லியிருக்கா. எல்லாப் பிள்ளையையும் சர்விசு பஸ்ஸில் கூட்டி வரச் சொல்லி எங்கிட்டப் பத்துரூவா குடுத்திருக்காரு!” என்று தெரிவிக்கும் மம்முட்டியானுக்கு வாயெல்லாம் பல்லாயிருக்கிறது. சந்தனக்குடும்பன் அழவாயியும் லட்சுமியும் பெற்று வந்து தந்திருக்கும் கூலியைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

“ஏண்டி, முக்காரூவா போல குறயிது? இன்னிக்கு லட்சுமி எத்தினி கட்ட அடுக்கினா?”

மம்முட்டியான் இடைமறித்து, “மாமா, அதெல்லாம் கணக்குப்புள்ள ரைட்டாத்தான் குடுத்திருப்பா. இந்தப் புள்ளயளுக்காக இம்புட்டுக்காசு செலவு பண்ணுறவ, கூலியக் குறப்பாகளா? விஜிம்மா பெரிய முதலாளி வீட்டு அம்மா, அவியளே சொல்லிருக்கா. அதான் சினிமாக்கெல்லாம் கூட்டிப்போறா... அளவாயிக்கு, சோப்பு, பவுடர் கூட வாங்கிக் குடுத்திருக்கா, பாரு!” என்று தெரிவிக்கிறான். “அடிசெறுக்கி, ஏங்கிட்டக் காட்டல...”

அழகாயி அதைக் கொடுக்கிறாள். அவன் வாங்கி முகர்ந்து பார்த்து அனுபவிக்கிறான். “லட்சுமிக்குக் கெடயாதா?”

“அழவு லேபல் ஒட்டுதல்ல? அந்தக் கணக்கபிள்ள வாங்கிக் குடுத்திருக்கா?”

வாரச்சம்பளம் கொடுத்து சினிமாவுக்கும் கூட்டிச் சென்று சோப்பு பவுடரும் வாங்கிக் கொடுத்து எவ்வளவு செலவு செய்கிறார்கள்! இந்த



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

மண்ணில் ஏதேனும் விதைக்க வேண்டுமானால் நூறு இருநூறு செலவு செய்ய வேணும். அதிலும் எதுவும் செலவு போக விளைந்து விடாது.

"என்ன சினிமா?..."

"அதென்னமோ சொல்லிகிட்டா... ஆடொண்ணு வந்து வித்தை எல்லாம் செய்யிதாம்! ரொம்ப நல்லாயிருக்கும்னு ருக்குமணி, சந்திரா எல்லாப் புள்ளயளும் சொல்லிட்ருக்கா?" சனிக்கிழமை இரவுகள், காசைக் கண்டிருக்கும் மகிழ்ச்சியில் இன்பக் கனவுகளில் மிதந்து கொண்டு உறங்கும் பொழுதுகள். வாரவட்டிக் கடன், அடுவான்ஸ் பிடித்தம் எல்லாம் போனாலும், சாமான் வாங்கிச் சமைத்துண்ணும் நாள்; ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நாள்; வறண்ட பொட்டலின் வறட்சியில் சற்றே பசுமை காணும் நாள்.

காத்தமுத்துப் பயல் தீப்பெட்டி ஆபீசு பஸ்ஸில் வராமலே நழுவி விட்டான். கையில் காசு தீரும் வரையிலும் தலை மறைவாக இருப்பானோ அல்லது திரும்புவானோ? சடச்சியைப் போட்டு அந்த ஆண் அடிக்கிறான். குடிப்பதற்குக் காசு கிடைக்காமல் போய் விட்டதே? புது நகரத்தில் ரொம்ப நாட்களுக்கு முன்பு ஃபயராபீசில் வேலை செய்ய வந்த கருப்பனின் பெண் சாதி சடச்சி, அப்போது கருப்பனும் போய் விட்டான். பிறகு சோளக்காட்டில் வேலை செய்ய வந்த போது இவனுடன் சேர்ந்து கொண்டாள். காத்தமுத்து கருப்பனுக்குப் பிறந்த பயல். இங்கிருந்தால் அத்தனை காசையும் பிடுங்கிக் கொள்வான். அதனாலேயே அந்தப் பயல் ஓடிப் போகிறான்...

அன்றிரவுப் பொழுது, சினிமாக் கனவுகளுடன் வெகு விரைவில் கழிந்து விடுகிறது. காலையில் புது நகரத்துக்குச் செல்ல, பலரும் சாக்குச் சொல்லிக் கொண்டு கிளம்புகின்றனர். பெரியபட்டிக்கடையில் அரிசி கிலோ இரண்டு ஐம்பது கொடுத்து வாங்கினாலும் சோறு நன்றாக இல்லை. மண்ணெண்ணெய் நூறு அறுபது பைசா என்று விற்கிறார்கள். புது நகரம்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

போனால் நூறு நாற்பத்தைந்து, ஐம்பதுக்குக் கிடைக்கும். சில பெண்கள் ஆண்கள் எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை கூடமங்கலத்துச் சாலையில் பஸ்ஸுக்கு வந்து காத்திருப்பது வழக்கம்தான்.

முடிசீவி, முகம் கழுவிப் பொட்டு வைத்து, வேறு உடை அணிந்து, மம்முட்டியானின் பின் சிறுவர் சிறுமியர் சின்னப்பட்டியிலிருந்து கூடமங்கலம் செல்லும் நேர்த்தடத்தில் நடந்து பஸ்ஸுக்கு வருகின்றனர். சினிமாவுக்கும் பஸ்ஸுக்கும் அவர்கள் காசு கொடுக்க வேண்டாம். ஆனால் அவர்கள் எல்லோரும் சில்லுப் பெட்டியில் ஆளுக்கு ஒரு ரூபாய், எட்டணா என்று காசு வைத்திருக்கிறார்கள். பச்சி, கிழங்கு தோசை என்று தீனி வாங்கித் தின்பதற்கும், இன்னும் சினிமா வாசலில் சோழி குலுக்கிப் போட்டு அதிர்ஷ்டம் பாக்கவும் பத்து பைசா இருபது பைசா வைத்து ஆடி, டிரான்சிஸ்டர் பெட்டி, டார்ச்லைட் போன்ற பரிசுகள் கிடைப்பதற்கு ஆசை கொண்டும் துடித்துக் கொண்டிருக்கின்றனர். அலுமினியம் தூக்குகளில் சோறும் கட்டி வந்திருக்கின்றனர்.

பெரிய சாலையில் மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் நாலைந்து பஸ்கள் ஓடிவிட்டன. அவர்கள் வந்த எக்ஸ்பிரஸ் வண்டிகளில் எல்லாரும் ஏறமுடியாது. பன்னிரண்டு மணி ஆட்டத்துக்குத்தான் வரச் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் ஒன்பதுக்கே ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டார்கள். காத்துக்கிடந்த பிறகு பதினொன்றுக்குச் செல்லும் கூடமங்கலம் பஸ் வருகிறது. பெரியபட்டிப் பிள்ளைகள் எப்போது, எப்படிச் சென்றார்களோ! இவர்கள் காலியாக வந்து நிற்கும் பஸ்ஸில் பாய்ந்து ஏறிக் கொள்கின்றனர். மம்முட்டியான் முதலிலேயே பின் வரிசைகள் இரண்டிலும் அவர்களை நெருக்கமாக உட்கார்த்தி வைக்கிறான். விருப்பம் போல் அமர்ந்து விட்டு பிறகு யாரேனும் வந்து உசுப்பித் தள்ளுவதற்கு முதலிலேயே கவனமாக இருப்பது நல்லதல்லவா?



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

அழகாயியின் அருகில் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு அவள் புதிதாகப் பூசியிருக்கும் பவுடர் மணத்தில் கிளர்ந்தவனாக மம்முட்டியான் சொர்க்கானுபவம் பெற்றிருக்கும் நேரத்தில் பிள்ளைகள் போடும் கூச்சலும் கும்மாளியும் சிரிப்பும் உறைக்கவேயில்லை. பஸ் புளிமூட்டை போல் மனிதர்களை அடைத்துக் கொண்டு நகர்வது கூடத் தெரியவில்லை. புறாக் குஞ்சு போல் மென்மையான அழகாயி அவன் மீது உராய்ந்து கொண்டிருக்கிறாள். பஸ் ஓடையில் இறங்கி ஏறிக் குலுங்கும் போதும், வளைவாகச் சாயும் போதும், உச்சி மரத்தில் இருந்து பொல பொலவென்று பூக்கள் சொரிவது போல் இருக்கிறது. அழகாயிக்கோ, உடலை மீறிச் சிந்திக்கும் சக்திகள் எதுவும் உறக்கத்தளை நீங்கியிருக்கவில்லை. காலையில் மாமன் உசுப்பும் போது உணர்வு பெற வேண்டும். பிறகு, தீப்பெட்டிகள் மேல் பெட்டி, அடிப்பெட்டி, குச்சிகள் எடுத்து எடுத்து அடைத்துச் செருகி, ஒன்று இரண்டு என்று பன்னிரண்டு பன்னிரண்டாக பன்னிரண்டு குரோசுகள்; எண்ணுவதற்குக் கூட இடைவெளி வேண்டாம். ஏனெனில் சட்டத்தில்தான் அடுக்குகிறார்கள். ஒரு குரோசு பதினேழு பைசா. கணக்கப்பிள்ளையிடம் சென்று காட்டும் வரையிலும் நெஞ்சுக்குள் கலக்கம் தான். சரியில்லை என்று உருவிப் போடுவான். அவன் சரி என்று சொல்வதற்குச் சில சங்கேதங்கள் உண்டு. பண்டல் 'ரூமிலி'ருந்து அவன் தலையில் பண்டல் எடுத்து வைக்கையில் கட்டுப்பிடித்து முகத்தில் முகம் வைப்பான். இதற்கெல்லாம் எதிர்ப்புக் காட்டக் கூடாது என்று புரிந்து இருக்கிறது.

"எத்தினி குரோசு?"

"இருபது..."

அப்பன் கேட்கும் கேள்விக்கு அவள் இப்படிப் பதில் கொடுக்க வேண்டும்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

இதுவரையிலும் சினிமா டிக்கெட் அவர்கள் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லி பஸ்ஸுக்கும் காசு கொடுத்ததில்லை. வேறு 'ஆபீசு'களில் கொடுப்பதாக சந்திரா, பாலமணி எல்லோரும் சொல்வார்கள்.

முன்பு அழவாயி, அம்மா, அப்பா, மம்முட்டியான் மற்ற பிள்ளைகள் எல்லோரும் 'தீபாவளி' போனசு வாங்கியதும் சினிமா பார்க்கப் போயிருக்கிறாள். அப்போது சீட்டு வாங்கப்பட்ட நெருக்கடி...! கூழாக நசுங்கி இடம் பிடிக்க வரிசை நின்று சீட்டு வாங்கி உள்ளே செல்கையில் தம்பி ஓரிடம் தங்கச்சி ஓரிடம் மாமன் ஓரிடம் மச்சான் ஓரிடம் என்று பிரிந்துவிட்டார்கள்.

இப்போது...

பஸ் நிற்கும் இடத்தில் மம்முட்டியான் சிறுவர்களைப் பார்த்து இறங்கச் செய்கிறான். 'ஏ, எல்லாம் கண்ட பக்கமும் ஓடாதிய! ஒதுங்கி நில்லுங்க! ரோட்டுல வண்டி மோட்டார் வருது!' என்று அதட்டி ஒதுக்குகிறான்.

சினிமாக் கொட்டகை வாயிலில் நெரிசல் சொல்ல முடியாது. சுற்றுவட்டமுள்ள ஊர்கள் எல்லாவற்றையும் துடைத்துக் கொண்டு ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகக் குழுமிவிட்டாற் போலிருக்கிறது. வாசல் முகப்பில் ஒரு பெண்ணின் படமும், ஆட்டின் பல நிலைப்படங்களும் வைத்திருக்கிறார்கள். ஆடு வேலி தாண்டிக் குதிக்கிறது. நாயைச் சுமந்து நிற்கிறது; வாயில் கடிதம் வைத்திருக்கிறது; காரை மோதிச் சண்டை போடுகிறது. எதிர்சாரியில் நின்று இக்காட்சிகளைப் பார்த்து மம்முட்டியான் பரவசமடையும் பொழுதுக்குள், பேராச்சியும், குரும்பனும் பச்சைமுத்துவும் எதிரே காசு வைத்துக் கட்டையாடப் போய்விட்டனர். ஒரு சதுரத்துணியில் நான்கு கட்டங்களில் கிளாவர், ஆடுதன், டயமன்ட், இஸ்பேட் சீட்டுச் சின்னங்கள் இருக்கின்றன. இவர்கள் பத்துப் பைசாக்களை விரும்பும் சின்னத்தில் வைக்கின்றனர். கடைக்காரன் பகடை உருட்டுகிறான். இரண்டு



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

கிளாவர் வருகிறது; யாரும் கிளாவர் வைக்கவில்லை. பத்து பைசா நஷ்டம். அடுத்து ஆடுதன் வைக்கிறான் பச்சமுத்து. அப்போது மம்முட்டியான் விரைந்து வந்து அவர்கள் முதுகில் போட்டுக் காதைப் பற்றி இழுக்கிறான்.

மன்னாரு அவர்களுக்கான சீட்டைக் கொடுத்து விட்டான். “எல்லாம் படம் முடிச்சிட்டு இங்ஙன வந்து தா பஸ் ஏறணும். ஒண்ணுக்கொண்ணு எங்கனாலும் போயிட்டாக்கூட, பதனமா வெளியே வந்து எதிர சோடாக்கட பக்கமா நிக்கணும்!”

வாயிலில் அடியும் பிடியுமாய் நிற்கும் ஆட்களைப் பார்த்ததும் இப்படி எல்லாம் படாமல் சீட்டு வாங்கிக் கொடுத்ததற்கு மன்னாருவைக் கும்பிட வேண்டும் போலிருக்கிறது, மம்முட்டியானுக்கு.

உள்ளிருந்து முதல் ஆட்டம் பார்த்துவிட்டு கும்பலும் வெளியிலிருந்து உள்ளே செல்ல வரிசை நிற்கும் கும்பலும் மோதிக் கொள்ளும். உச்ச கட்டம் இன்னும் வரவில்லை. லச்சுமியும் அழகாயியும் மம்முட்டியானும் கூடக் காசு வைத்து வட்டம் சுற்றும் ஆட்டம் ஆடுகிறார்கள். இவர்கள் சொல்லும் இடத்தில் வந்து அந்தக் காற்றாடி வட்டமுள் நிற்கவில்லை. மம்முட்டியானுக்கு அந்தப் பாடும் பெட்டி (டிரான்ஸிஸ்டர்) ஒன்று வாங்கிக் கையில் குசாலாகப் பிடித்துக் கொண்டு செல்ல வேண்டும் என்று மிகுந்த ஆசை உண்டு. அதற்காகவே தனது மாசச் சம்பளப் பணத்தைச் சேமிக்கப் பார்க்கிறான். ஆனால் இரண்டு சட்டை தைத்துக் கொண்டிருக்கிறான்; காலையில் பிள்ளைகளை எழுப்பச் செல்லத் தோதாக, ஒரு ‘பாட்டரி’ விளக்கு வாங்கியிருக்கிறான். இதுவே மிக அதிகம். அழகாயியைக் கட்ட வேண்டுமானால் பணம் சேர்க்க வேண்டும். ஒரு சேவல் வாங்கியிருக்கிறான். சென்ற ஈற்றில் ஆடு இரு குட்டியீன்று அவை பெரிதாகி வருகின்றன. இன்னும் பெரிதாகி, அவற்றில் ஒன்றை விற்றால் கல்யாணச் செலவுக்காகும் என்று மாமன் கணக்குப் போட்டிருக்கிறான். தனியாகக் குடிசைப் போட்டுக்



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் உத்தேசித்து, திருமணச் சடங்கைத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள்.

உள்ளிருக்கும் கூட்டம் வெளிவர, மம்முட்டியான் கையில் எல்லோருக்கும் கொடுத்திருக்கும் சீட்டுக்களுடன் கூட்டத்தில் மோதிக் கொண்டு முன்னேறுகையில் மம்முட்டியானும் சில சிறுவர்களும் பிரிந்து போகின்றனர். பெண்களின் பக்கத்தில் அழவாயி எங்கே உட்கார்ந்திருக்கிறதோ என்று கண்டுபிடிக்க முடியவில்லை. கூச்சலும் மோதலும் குழந்தைகள் அழுகையும் இடியும் மிதியுமான போர்க்களமாக இருக்கிறது.

என்றாலும் பாட்டு நின்று திரையில் படங்கள் தோன்றி சினிமா பார்க்கையில் பொழுது போவது தெரியவில்லை. படம் முழுவதும் ஒரு கனவுலகைக் கண்முன் காட்டி அவர்களைச் சொக்க வைக்கிறது. படம் முடிந்து மீண்டும் மோதல்கள்... “ஏத்தா? எங்கிட்டிருக்கே? அடி... சீலய வுடிடீ!... ஐயோ கால மிதிக்காதேடீ!” என்ற பல கூச்சல்களைக் கடந்து, அழகாயி வெளியில் வரும்போது, மன்னாரு அவள் கையை வலுவாகப் பற்றி இழுக்கிறான்.

“ஏ அழவாயி! இங்க வாடி!”

லச்சுமியின் கையை அவள் பற்றியிருக்கிறாள்.

வாசலில் ஒரு லாரி நிற்கிறது. அவன் அவளை அந்த லாரிக் கதவைத் திறக்கச் செய்து உள்ளே ஏறச் சொல்கிறான்.

“ஏ புள்ள? ஆபீசுக் கொட்டடியெல்லாம் கூட்டிச் சுத்தமாக்கணும்! இவளக் கூட்டிட்டுப் போற. மறுக்க பஸ் ஸ்டான்டில வந்து சேந்துப்பா! மம்முட்டியாங்கிட்டச் சொல்லு!”



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

“அவ எந்தங்கச்சி, அதும் வரட்டும்!” என்று சொல்ல அழவாயிக்கு நா துடிக்கிறது. ஆனால் லாரிப் பின்புறம் அவள் ஏறிக் கொண்டதும், மன்னாரு முன்னே ஏறிக் கொள்கிரான். அது கிளம்பிவிடுகிறது.

மம்முட்டியான் அழவாயியை லாரியில் பார்த்துவிட்டு ஓடி வருமுன் அது போகிறது.

“ஏட்டி? அழவு எங்கிட்டுப் போறா?”

“கணக்கவுள்ள ஆபீசு கூட்டணும்னு கூட்டிட்டுப் போறா” என்று லச்சுமி தெரிவிக்கிறாள். மம்முட்டியான் திகைத்துப் போய் நிற்கிறான்.

சற்று முன் பார்த்த ஆடு, அந்தப் பெண், அவர்களின் சாகசங்கள் விளைவித்த இனிய கற்பனைகள், எல்லாம் பசுமைகளிழந்து செத்தைக் குப்பைகளாகிவிட, அதில் ஓர் தீக்கங்கு விழுந்துவிட்டாற் போல் இழப்புணர்வு மேவுகிறது.

அந்தத் தொழில் நகரத்தின் விடுமுறை நாளையப் பேரியக்கம், மீண்டும் கொட்டகை வாயிலில் அடுத்த காட்சிக்குக் கூடியிருக்கும் கும்பலில் உயிர்நிலை கொண்டிருக்கிறது.

கூச்சல், மோதித் தள்ளும் நெருக்கடிகள், இவற்றில் பல பசிகளின் தினவுகள் தீர்க்கும் வியாபார சந்தடிகள் எல்லாம். கபடறியாமல் வளர்ந்த இயல்பான ஆசைகளில் மகிழ்ந்து கொண்டிருந்த மம்முட்டியானின் உணர்வில் ஓர் உண்மையல்லாத புழுதிப்படலத் தோற்றத்தைச் சிருஷ்டிக்கிறது.

கையில் இன்னும் சோற்றுப் பாத்திரங்களை வைத்திருக்கும் சிறுவர் சிறுமியர், “பசிக்கிது ஏத்தா, அழவு வாரதுக்கு முன்ன சோறு தின்னுப்பம்... எங்கிட்டுப் போவ?”

மம்முட்டியானுக்கு எதுவும் செவிகளில் ஏறவில்லை.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

எதிர்ச்சாரியில் நடந்து சென்று, ரிக்ஷாக்கள் ஒதுங்கி இருக்கும் ஓரிடத்தில் அமர்ந்து அந்தச் சிறுவர்கள் பசியாறும் போது கூட மம்முட்டியான் சாலையில் ஏதேனும் லாரி இரைந்து கொண்டு நின்றால் கூர்மையாகப் பார்க்கிறான். சிறுவர் சிறுமியர் ஐந்து பைசாக் கொடுத்து, சில்லென்ற தண்ணீர் வாங்கி அருந்துகின்றனர்.

மம்முட்டியானின் கண்கள், நீலமும் பச்சையும் மஞ்சளும், பூச்சேலைகளும், ரோஸ் நாடாக்களும் எண்ணெய் மினுமினுப்புக்களுமாக வரும் பெண்களிடையே அழகாயியைத் தேடுகின்றன. அவள் ஆளான போது அவன் மாமனாக கடன்பட்டு வாங்கிய பூப்போட்ட சேலையை அணிந்து ரோஸ் நாடாவைப் பின்னல் போட்டிருந்தாள்.

ஆவல்களனைத்தும் மடிந்து போகின்றன.

மாலை வெளிச்சம் மங்கி, நீலம் பாரித்த ஒளிவிளக்குகள் பூத்துவிட்டன; என்றாலும் கூட, அந்தப் புழுதிப்படலத்தில் உறைக்கவில்லை.

கூடமங்கலம் செல்லும் பஸ் வந்துவிட்டது.

மம்முட்டியான் அலைபாய்கிறான். பஸ்ஸில் ஏறுவதற்குக் காத்துக் கிடக்கும் கூட்டம் பாய்ந்து உள்ளே இடம் பிடிக்கிறது. கூடைகள், சாமான்சட்டு என்று தங்கள் உடமைகளுடன் கிராமத்து மக்கள் வண்டியை நிறைக்கின்றனர்.

அழவு... அழவாயி நல்லபடியா வந்து சேரட்டும், கருப்பண்ணசாமிக்குக் கோழி வுடறேன் என்று மனசுக்குள் வேண்டிக் கொண்டு அவன் நிற்கையில் அழவாயி... அவள் அவளேதான், அவன் கண்களுக்குத் தெரியும்படி அந்தப் புழுதிக் கசகசப்பை விழுங்கிக் கொண்டு அவன் முன் தோன்றுகிறாள். தவிப்பெல்லாம் உருகிவிட நெகிழ்ந்த குரலுடன், “அழவு, எங்கிட்டுப் போயிட்ட?” என்று கையைப் பற்றிக் கொள்கிறான்.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

அவள் முகத்தில் பவுடரும் பொட்டும் இருந்த திட்டுத் திட்டான தடங்கள் கூட இல்லை. ஒரு சூறைக் காற்றடித்து எல்லாம் தடமில்லாமல் போய் விட்டாற் போல் வெறுமை நிலவுகிறது. கொட்டடியைத் தண்ணீர் விட்டுக் கழுவி இருப்பாள். முகத்தையும் கழுவிக் கொண்டிருப்பாள்...

“எல்லாம் ஏறுங்க... ஏறுங்க பஸ்ஸில... விரிசா!”

வண்டியிலிருந்து கூடமங்கலத்தில் இறங்கி அவர்கள் தங்கள் கிராமத்துக்கு நடக்கையில், சோர்வும் அயர்ச்சியும் சினிமாப் பார்த்த பரவசக் கிளர்ச்சிகளை விழுங்கிவிட்டதால், அதைப் பற்றிப் பேசும் தெம்பு கூட இல்லை.

குடும்பனின் வீட்டுக்குள் விளக்கெரிவது தெரிகிறது. வாயிலில் பிள்ளைகள் படுத்து உறங்கிவிட்டனர்.

உள்ளே மாடத்திக் கிழவியும், பேராச்சியின் தாயும் இருக்கின்றனர். புதிய குழந்தையின் ஒலி கேட்கிறது.

அழகாயி அதைக் கேட்டதும் ஆவல் கிளர்ந்து ஓடவில்லை.

“அடி, உங்காயி பெத்திருக்கா, சோறொண்ணும் ஆக்கல. ஆம்புள்ளயாப் பெறந்திருக்கு, அடுப்பக் கொளுத்தி கஞ்சி எதுனாலும் காச்சு. காலம போனவுங்க, பன்னண்டு மணி ஆட்டம் பாத்தா, மூணு மணிக்கு ஆட்டம்வுட்டு அஞ்சு மணிக்குள்ளாற வாரதில்ல? லேடியோல்லாம் முடிஞ்சாச்சி!” என்று அப்பன் குறை கூறுகிறான்.

“நாங்க வாரத்தா இருந்தம். கணக்குபுள்ள வந்து அக்காள ஆபீசு கூட்டணும்னு கூட்டிட்டுப் போயிட்டா. அது இப்பதா வந்திச்சி...” அழகாயி குழந்தையைப் பார்க்கக் கூட நிற்கவில்லை. உள்ளே சென்று வேலிக்கருவையின் காய்ந்த முள்ளை அடுப்பிலிட்டுப் பற்ற வைக்கிறாள். அவள் முகம் அந்த ஒளியிலும் கூட இறுகிக் கிடக்கிறது.



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

"கணக்கபுள்ள ஆபீசு கழுவக்கூட்டிப் போனானா?" என்று அப்பன் திருப்பிக் கேட்கிறான்.

"நாத்திக்கிழமையும் வேல வாங்குறாங்க. எனக்குத் தெரியல, மாமனக் கேக்கணும்னு சொல்லாம ஏறிட்டா" என்று முணுமுணுக்கிறான் மம்முட்டியான்.

அழகு பதில் சொல்லவில்லை. முள் உள்ளங்கையைக் குத்திவிடச் சிவப்பாக இரத்தம் தெரிகிறது.

"அதுக்குத் தனியாக எதுனாலும் கூலி கொடுத்தானா?" அழகாயி அப்போதுதான் நினைப்பு வந்தாற் போல் தலைப்பில் முடிந்து செருகிக் கொண்டிருந்த முடிச்சை அவிழ்க்கிறாள். கசங்கிய ஒரு ரூபாய் நோட்டும் இரண்டு கால் ரூபாய் நாணயங்களும் வெளிப்படுகின்றன.

"ஒண்ணரை ரூவாயா?..." என்று கேட்டு அப்பன் வாங்கிக் கொள்கிறான்.

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com